**ஜுன் - 28**

# TNPSC துளிகள்

- கிராண்ட் மாஸ்டரான P. ஹறிகிருஷ்ணா என்பவர் 1,50,000 அமெரிக்க டாலர் மதிப்பு கொண்ட சதுரங்க மாஸ்டர்களைக் கொண்ட குழுவில் இணையும் முதலாவது இந்திய வீரராக உருவெடுத்துள்ளார்.
- மகாராஷ்டிர மாநில அரசானது தொழிற்துறைகளுக்கான புதிய முதலீடுகளைக் கவர்வதற்காக வேண்டி “மகா பர்வானர்” என்ற திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது.
- நாசாவானது வாஷிங்டன் டி.சியில் உள்ள தனது தலைமையகக் கட்டிடத்திற்கு அதன் முதலாவது ஆப்பிரிக்க-அமெரிக்க பெண் பொறியாளரான மேரி W. ஜாக்சன் என்பவரது பெயரை வைத்துள்ளது.
- வினி மகாஜன் என்பவர் பஞ்சாப் மாநிலத்தின் முதலாவது பெண் தலைமைச் செயலாளராக உருவெடுத்துள்ளார்.
- 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ள இருக்கும் விண்வெளி நடைபயணத்திற்காக வேண்டி முதலாவது சுற்றுலாப் பயணியை விண்வெளிக்குக் கொண்டு செல்ல இருப்பதாக ரஷ்யா அறிவித்துள்ளது.
- ஐரோப்பியக் கால்பந்து விளையாட்டுப் போட்டியில், லிவர் பூல் அணியானது முதன்முறையாக 2019/20 ஆண்டுப் பதிப்பின் ஆங்கிலப் பீரிமியர் லீக் பட்டத்தை வென்றுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் MSME


- மத்திய அரசானது சிறு, குறு, மற்றும் நடுத்தர தொழிற்துறையை மீட்டெடுப்பதற்காக வேண்டி தமிழ்நாடு மாநிலத்திற்கு ரூ. 4125 கோடியை ஒதுக்கியுள்ளது.
- இது அத்திட்டத்தின் ஒட்டு மொத்த நிதியில் 10% ஆகும். இது தமிழ்நாட்டில் சிறப்பான முறையில் செயல்படுத்தப் படுகின்றது.

# தேசியச் செய்திகள்

## புதிய நடைமுறைகளைச் செயல்படுத்துதல்

- நிதி ஆயோக் ஆனது நடத்தை மாற்றப் பிரச்சாரமான “புதிய நடைமுறைகளைச் செயல்படுத்துதல்” என்ற ஒரு பிரச்சாரத்தையும், அதற்கான இணையதளத்தையும் தொடங்கி உள்ளது.

- இது கோவிட் - 19 நோய்த் தொற்றின் காரணமான பொது முடக்க நீக்க நடவடிக்கையின் போது கோவிட் - 19 நோய்த் தொற்றுக்கான பாதுகாப்பான நடைமுறைகள் மீது குறிப்பாக முகக் கவசங்கள் அணிதல் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது.
- இதற்கான பங்கேற்பாளர்கள் பின்வருமாறு
  - பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அமைப்பு
  - அசோகா பல்கலைக் கழகத்தின் சமூக மற்றும் நடத்தை மாற்ற மையம்
  - மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்.
  - மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம்.




## இந்தியாவில் கோதுமை உற்பத்தியாளர்

- இந்த ஆண்டில் இந்தியாவில் கோதுமை உற்பத்தியில் பஞ்சாப் மாநிலத்தைப் பின்னுக்குத் தள்ளி மத்தியப் பிரதேச மாநிலம் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- நாட்டில் கோதுமை பயிரிடப்பட்ட ஒட்டு மொத்தப் பகுதியில் மத்தியப் பிரதேசத்தின் பங்கு 31% ஆகும்.

## லால்-பால்-பால் (Lal-Bal-Pal)

- புனேவில் உள்ள “சர்ஹாத்” என்ற ஒரு இலாப நோக்கற்ற அமைப்பானது மகாராஷ்டிரா மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவற்றிற்கிடையேயான உறவை வலுப்படுத்துவதற்காக வேண்டி கல்வி மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் கொண்ட ஒரு தொடரை தொடங்க இருக்கின்றது.
- இது தேசியவாதிகளான லாலா லஜபதி ராய், லோக்மானிய பால கங்காதர திலகர் மற்றும் பிபின் சந்திர பால் ஆகியோரின் நினைவாக விடுதலைப் போராட்டக் காலத்திய உணர்வை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## வருடாந்திர வங்கியியல் புள்ளி விவரம் - 2019

- இது சுவிட்சர்லாந்தின் மத்திய வங்கியான சுவிஸ் தேசிய வங்கியினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்தியா தனது குடிமக்கள் மற்றும் நிறுவனங்களால் அந்நாட்டு வங்கியில் நிதி முதலீடு செய்யப் பட்டதின் அடிப்படையில் 0.06%யுடன் 77வது இடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் பிரேசில் முதல் இடத்தில் உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## மாரீச் நீர்மூழ்கிக் குண்டு தடுப்பு அமைப்பு

- இந்தியக் கடற்படையானது இந்த அமைப்பை தனது கடற் பணியில் சேர்த்துள்ளது.
- இது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அதிதிறன் கொண்ட மேம்படுத்தப்பட்ட மாரீச் வகை அமைப்பாகும்.
- மாரீச் வகை நீர்மூழ்கிக் குண்டு என்பது கப்பலின் மேற்பரப்பு, நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் விமானத்திலிருந்துச் செலுத்தப்படும் வகையில் தன்னைத் தானே-செலுத்தும் திறன் கொண்ட ஒரு நீர்மூழ்கி ஏவுகணையாகும்.



## SPARC

- மதராஸ் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பசுமை ஆற்றல் தீர்வுகளுக்கான புதிய பொருட்களை உருவாக்குவதற்காக ஜெர்மனியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்துள்ளனர்.
- இந்தத் திட்டமானது அறிவு சார் மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பின் ஊக்குவிப்புத் திட்டம் அல்லது SPARC (Scheme for Promotion of academic and Research Collaboration) என்பதின் கீழ் மேற்கொள்ளப் படுகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## தில்லாரி வனப் பகுதி

- மகாராஷ்டிரா மாநில வனத் துறையானது அதன் கடலோர மாவட்டமான சிந்துதுர்கா மாவட்டத்தின் தோடாமார்க் மற்றும் சாவந்த்வாடி பகுதியில் உள்ள தில்லாரி வனப் பகுதியை பாதுகாக்கப்படும் ஒரு காப்பு வனப் பகுதியாக அறிவித்துள்ளது.
- தில்லாரி வனச் சூழலமைப்பானது புலிகளுக்கு உகந்ததாக உள்ளது. இது சஹ்யாத்ரி புலிகள் காப்பகத்திற்கான ஒரு மூலதாரமாகவும், புலிகளுக்கு வேண்டிய ஒரு வாழிடமாகவும் விளங்குகின்றது.

## சட்ட விரோத வனவிலங்கு வர்த்தகம் குறித்த அறிக்கை

- சமீபத்தில் சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகம் குறித்த அறிக்கையானது நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவினால் (FATF - Financial Action Task Force) வெளியிடப் பட்டுள்ளது.
- இது "நிதி மோசடி மற்றும் சட்டவிரோத வனவிலங்கு வர்த்தக அறிக்கை" என்று அழைக்கப் படுகின்றது.




## இந்தியாவில் புலிகள் இறப்பு

- இந்தியாவில் கடந்த 8 ஆண்டுகளில் (2012-19) 750 புலிகள் இறந்துள்ளதாக தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையம் அறிவித்துள்ளது.
- மத்தியப் பிரதேச மாநிலமானது அதிக எண்ணிக்கையிலான (173) புலிகள் இறப்பைப் பதிவு செய்துள்ளது.

- மகாராஷ்டிரா மாநிலமானது இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான (125) புலிகள் இறப்பைப் பதிவு செய்துள்ளது.

# மாநிலச் செய்திகள்

## சிறு தொழிற்சாலைகள் - கர்நாடகா

- சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழிற்சாலைகளுக்காக வேண்டி தொழிற்சாலைகள் சட்டத்தைத் திருத்தும் முதலாவது மாநில அரசு கர்நாடகா ஆகும்.
- குஜராத் மற்றும் இராஜஸ்தான் ஆகிய 2 மாநிலங்கள் மட்டுமே (சிறிய அளவிலான தொழிற்சாலைகள் மட்டும்) நாட்டில் இதுவரை இச்சட்டத்தைத் திருத்தியுள்ளன.

## ஆத்ம நிர்பர் உத்தரப் பிரதேச ரோஜ்கர் யோஜனா

- இது உத்தரப்பிரதேசத்தின் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கி வைக்கப் பட்டுள்ளது.
- இது உத்தரப் பிரதேசத்தில் 1.25 கோடி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய வகையில் நாட்டின் மிகப்பெரிய ஒரு வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டமாகும்.

## கோதான் நியாய் யோஜனா

- சத்தீஸ்கர் மாநில முதல்வரான பூபேஷ் பாகல் அம்மாநிலத்தில் "கோதான் நியாய் யோஜனா" என்ற ஒரு திட்டம் தொடங்கப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.
- இது கால்நடை வைத்திருப்பவர்களிடமிருந்து மாட்டுச் சாணத்தை வாங்கும் முதலாவது இந்திய மாநிலமாக உருவெடுத்துள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## 2023 ஆம் ஆண்டின் பெண்கள் உலகக் கோப்பை

- பிபா அமைப்பானது இந்த உலகக் கோப்பைப் போட்டியை நடத்தும் பொறுப்பை ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்திடம் வழங்கியுள்ளது.
- ஆசியா-பசிபிக் பிராந்தியத்தில் நடத்தப்பட இருக்கும் முதலாவது பெண்கள் உலகக் கோப்பை இதுவாகும்.

# முக்கிய தினங்கள்

## போதை மருந்து முறைகேடு மற்றும் சட்ட விரோதக் கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் - ஜுன் 26

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது உலகம் முழுவதும் போதை மருந்து முறைகேடுகளற்றச் சமுதாயத்தை உருவாக்கும் பொருட்டு இத்தினத்தை அறிவித்து உள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “சிறந்த நலத்திற்கான சிறந்த அறிவு” என்பதாகும்.
- இந்த நிகழ்வின் போது, போதை மருந்துகள் மற்றும் குற்றங்கள் குறித்த ஐக்கிய நாடுகள் அலுவலகமானது உலக போதை மருந்து அறிக்கை - 2020 என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.




## சித்திரவதைக்கு உள்ளானவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான சர்வதேச தினம் - ஜுன் 26

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இத்தினத்தை 1997 ஆம் ஆண்டில் பறை சாற்றியது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★